**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No. 37/2019**
**PW7**

| | | |
|---|---|---|
| Name | : | சரண்ராஜ் |
| Father's/Husband's Name | : | நாராயணன் |
| Village | : | திருவண்ணாமலை |
| Taluk/District | : | திருவண்ணாமலை |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26.09.2025.

A1, 4 to 13, 15 to 17 present. Petition u/s 317 crpc filed and allowed for A2. Charge against A3 and A14 abated.

**முதல் விசாரணை**

நான் திருவண்ணாமலையில் இடுக்கு பிள்ளையார் தெருவில் டிப்போவிற்கு எதிரே ஒரு சிற்றுண்டி மற்றும் டீ கடை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை யாரையும் பார்த்ததில்லை. ( 2 ம் எதிரி ஆஜரில்லை, மனு அனுமதிக்கப்பட்டது). நான் ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறேன். சுமார் 10 -11 வருடத்திற்கு முன்பு செங்கம் சாலையில் அத்தியந்தல் ஏரி அருகே ரியல் எஸ்டேட் சம்மந்தமாக சென்றிருந்தேன். அப்போது எங்களுக்கும் இடம் வாங்கும் தரப்பினருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. அது சம்மந்தமாக நான் திருவண்ணாமலை தாலுக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுக்க போனேன். அப்போது ஆய்வாளர் என்னிடம் 4, 5 வெற்று பேப்பரில் கையொப்பம் பெற்றுகொண்டார். என்னுடன் யாரும் கையொப்பம் செய்யவில்லை. என் முன்னிலையில் யாரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை. என் முன்னிலையில் போலிசார் எந்த வழக்கு சொத்தையும் கைப்பற்றவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி முருகன் கொடுத்தாக உள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.3.** நான் கையொப்பம் இட்ட போது பூர்த்தி செய்யப்படாத வெள்ளைத்தாளாக இருந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி பார்த்திபன் கொடுத்தாக உள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.4.** நான் கையொப்பம் இட்ட போது பூர்த்தி செய்யப்படாத வெள்ளைத்தாளாக இருந்தது.

என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி பட்டுசாமி கொடுத்தாக உள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.5.** நான் கையொப்பம் இட்ட போது பூர்த்தி செய்யப்படாத வெள்ளைத்தாளாக இருந்தது. எதிரிகள் முருகன் மற்றும் பார்த்திபன் ஆகியோரிடம் இருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்துகள் முறையே **அ.த.சா.ஆ.6 மற்றும்** 7. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸ் விசாரணையில் கடந்த 07.05.2013 ம் தேதி பகல் 1 மணி அளவில் நானும் எனது கடை குமாஸ்தா வேலு என்பவரும் திருவண்ணாமல ஆணாய்பிறந்தான் கூட்ரோட்டிடம் ரியல் எஸ்டேட் தொழில் சம்மந்தமாக நின்றுகொண்டிருந்போது திருவண்ணாமலை கிராமிய காவல் ஆய்வாளர் ஆஜர் எதிரி முருகன் மற்றும் ஆஜராகாத எதிரி பார்த்திபன் ஆகியோரை லாரியை கொளுத்திய வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்து கொண்டிருந்தபோது அவர்கள் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் என் முன்னிலையிலும் சாட்சி வேலு முன்னிலையிலும் பதிவு செய்தார் என்றும் அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றும் ஒப்புதல் வாக்குமூலத்தை தொடர்ந்து 15.30 மணிக்கு அந்தியந்தல் ஏரிக்கரையில் உள்ள முட்புதரில் 1வது எதிரி முருகன் எடுத்து ஆஜர் செய்த வெள்ளை நிற அரைக்கை சட்டை ஒன்று அதில் வலது முன் பக்கத்தில் தீயில் எரிந்து கருகி இருந்தது என்றும் அதில் பெட்ரோல் வாடை உள்ளது என்றும் அதை ஒரு மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும் அதில் நானும் வேலுவும்

சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் பிறகு 16.00 மணிக்கு அந்தியந்தல் ஏரிக்கரை முட்புதரில் இருந்து எதிரி பார்த்திபன் சுமார் 10 லிட்டர் பிடிக்கக்கூடிய புளூ கலர் பிளாஸ்டிக் கேன் ஒன்றும் சுமார் 650 எம்எல் கொண்ட 4 கண்ணாடி பாட்டிலும் தீயில் எரிந்த நிலையில் இருந்த சட்டை ஒன்றும் தீயில் எரிந்த நிலையில் இருந்த லுங்கி ஒன்றும் 2 ம் எதிரி எடுத்து ஆஜர் செய்தார் என்றும் அதை ஆய்வாளர் ஒரு மகஜரில் கைப்பற்றினார் என்றும் அதில் நானும் வேலுவும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றும் பிறகு 24.05.2013 ம் தேதி காலை 8.30 மணி அளவில் ரியல் எஸ்டேட் தொழில் சம்மந்தமாக நானும் எனது குமாஸ்தா வேலுவும் திருவண்ணாமலை காஞ்சி சாலை அபாய மண்டபம் அருகே இருந்தபோது மேற்படி வழக்கு சம்மந்தமாக எதிரி பட்டுசாமியை தாலுக்கா காவல் ஆய்வாளர் கைது செய்து விசாரித்தார் என்றும் அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் வேலுவும் கையொப்பம் இட்டோம் என்றும் என்னை இது சம்மந்தமாக ஆய்வாளர் விசாரித்தார் என்று சொல்லிவிட்டு எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**</u>

என்னிடம் காண்பிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தபோது அது பூர்த்தி செய்யப்படாத வெள்ளை பேப்பராகதான் இருந்தது . அந்த கையொப்பங்களை நான் காவல் நிலையத்தில்தான் போட்டேன்.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C.Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.